அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

22 T I

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018
First Term Test - Grade 13 - 2018

சுட்டெண் : ......................

புவியியல் I
Geography I

காலம் : 2 மணி

- **இவ்வினாப்பத்திரம் இரு பகுதியைக் கொண்டது.**
- **பகுதி I பல்தேர்வு வினாக்கள் 40 ஐ உள்ளடக்கியது. அதில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **பகுதி II இல் 5 வினாக்களுள்ளன அதில் 1ம் வினா கட்டாயமானது. மிகப் பொருத்தான விடையை தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**
- **பகுதி II ஆம் III ஆம் பகுதிகளிலிருந்து ஒவ்வொரு வினாவை தெரிவு செய்து விடை எழுதுக.**
- **மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.**

## பகுதி I

1. இலங்கையின் வடக்கிலிருந்து தெற்குவரையிலான 432 km தூரத்தினை 1:50000 அளவுதிட்டத்தில் எவ்வாறு காட்டப்படும் என்பதை தெரிவு செய்க.
   1. 448cm 2. 864cm 3. 216cm 4. 1296 cm 5. 224cm (.........)

2. 1:50000 இடவிளக்கப்படங்களில் காட்டப்படும் வீதிவலையமைப்பு குறியீட்டு விளக்கம் படத்தின் வகை என்பவற்றை காட்டும் படப்பகுதிகள்.
   1. மேல்எல்லைஓரம், உள் எல்லை, கீழ் எல்லை ஓரம்
   2. படத்தின் உள்எல்லை, புறஎல்லையின் கீழ் ஓரம், புறஎல்லையின் மேல் ஓரம்
   3. கீழ் எல்லை ஓரம், மேல் எல்லை ஓரம், படத்தின் முகப்பு
   4. படத்தின் முகப்பு உள்எல்லை, மேல்எல்லை ஓரம்
   5. உள் எல்லை, கீழ் எல்லை ஓரம், படத்தின் முகப்பு (.........)

3. படத்தில் காட்டப்பட்டுள்ள புவியின் உயரத்தைக்காட்ட பயன்படுத்தப்பட்டுள்ள தேசப்பட விஞ்ஞான முறைகள் மூன்றும் எவை?
   1. சமவுயரக்கோடு, திரிகோண கணிதநிலையம், பற்றைக்காடு
   2. கூம்புக் குன்று, கனவாய், மென்சாய்வு
   3. இடவுயரம், புல்நிலம், மலைஉச்சி
   4. திரிகோண கணித நிலையம், சமவுயரக்கோடு, இடவுயரம்'
   5. புல்நிலம், கூம்புக்குன்று, குத்துச்சாய்வு (.........)




4. பூமியில் 16 $km^2$ சதுரவடிவமான இறப்பர் தோட்டமொன்று 1,50000 இடவிளக்கப்படமொன்றில் எவ்வாறு காட்டப்படும்?
   1. 32 $cm^2$ 2. 96 $cm^2$ 3. 64 $cm^2$
   4. 68 $cm^2$ 5. 4 $cm^2$ (.........)

5. 1:50000 இடவிளக்கப்படங்களில் புல்நிலம் மற்றும் ஆற்றுமுகம் என்பன அடங்கும் பௌதீக இலட்சணப் பிரிவினை தெரிவுசெய்க
   1. இயற்கைத் தாவரம் மற்றும் நீர்வடிகாலமைப்பு
   2. காடுகள் மற்றும் காரையோர அம்சம்
   3. இயற்கைத் தாவரம் மற்றும் பண்பாட்டம்சம்
   4. இயற்கைத்தாவரம் மற்றும் கரையோர அம்சம்
   5. காடுகள் மற்றும், நீர்ப்பாசன அம்சம் (.........)

6. புவியியல் தகவல்முறைமையில் மென்பொருளை பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கையை காட்டும்விடை பின்வருவனவற்றுள் எது?
1. புவியியல் தரவுகளை எண்ணிலக்கத்தரவுகளாக மாற்ற
2. தரவுகளை கணனிக்கு உட்படுத்த
3. புவியியல் தரவுகள் மற்றும் தகவல்களை சேகரிக்க
4. புதி படமொன்றை உருவாக்க
5. படத்தயாரிப்புக்குத் தேவையான தகவல்களைப் பெற (.........)

7. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமைக்கு (GPS) அமைய பசுபிக் கடற்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. அவதானிப்பு நிலையங்கள் இரண்டையும் காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?

| | |
|---|---|
| 1. ஹவாய், அசெஞ்சன | 2. அசெஞ்சன், தியாகோகாசியா |
| 3. குவாசினில், அசெஞ்சன் | 4. கொலராடோ, தியாகோகாசியா |
| 5. ஹவாய், குவாசினில் | (..........) |

8. A - விண்வெளியில் நிரந்தமான இடத்தில் நிருத்தி வைக்கப்பட்டிருக்கும்
B - புவிச்சுழற்சிக்கு சார்பாக சுழற்சியடையும்.
மேலே குறிப்பிட்டடுள்ள இலட்சணங்கள் உள்ளடங்கிய தொலையுணர்வு தொழில் நுட்பத்தில் தரவுகளை சேகரிக்க பயன்படுத்தப்படும் முறை பின்வருவனவற்றுள் எது?

| | | |
|---|---|---|
| 1. விமானப்படம் | 2. செய்மதிகள் | 3. வான் வழி ஒளிப்படம் |
| 4. முனைவு சுழற்சி செய்மதி | 5. வான்வெளி விமானம் | (.........) |


9. தொடர்ச்சியான தரவுக்கும் தொடர்ச்சியற்ற தரவுக்கும் உதாரணம் பின்வருவனவற்றுள் எது?
1. பாடசாலை மாணவர் தொகை, மழைவீழ்ச்சித்தரவு
2. பிள்ளைகளின் நிறை தொடர்பான தரவு, பிள்ளைகளின் உயரம்
3. நாளாந்த வெப்பநிலை, பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை
4. குடும்பமொன்றின் குழந்தைகளின் எண்ணிக்கை, மரமொன்றின் வளர்ச்சிப்போக்கு
5. அநுராதபுரத்திலுள்ள குளங்களின் எண்ணிக்கை, பாதையில் பயணம் செய்யும் வாகனங்களின் எண்ணிக்கை (.........)


10. இரண்டாம் நிலைத்தரவுகளை திரட்டும் போது பயன்படத்தக் கூடிய மிகப்பொருத்தமான தரவு சேகரிப்பு முறை பின்வருவனவற்றுள் எது?


| | | |
|---|---|---|
| 1. செய்தித்தாள் | 2. வானொலி | 3. இன்டநெட் |
| 4. விமானப்படம் | 5. தொலைக்காட்சி | (.........) |

11. பாறைகளின் உருவாக்கத்தின்போது தலையீட்டுப் பாறை உருவாவதற்கான காரணத்தை காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?
1. மெக்மா வெளிவரும் வழியில் மென்பாறைகள் காணப்படல்
2. வெளியே பாய்ந்து வரும் மக்மாவில் பலம் குறைவாக காணப்படல்
3. புவிக்குள்ளே பலவீனமான மூட்டுக்கள் காணப்படல்
4. புவிக்குள்ளேயுள்ள மக்மாவின் அமுக்கம் குறைவடைதல்
5. தகட்டு எல்லைகளின் உள்ளே வெடிப்புகள் உருவாதல் (.........)

12.


A



B


C

புவியில் அரித்தல் செயற்பாடுகளால் உருவாகும் நிலவுருவங்கள் சில தரப்பட்டுள்ளன. இவை எந்த புறவிசைச் செயற்பாடுகளால் உருவாகின்றன என்பதை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடையை தெரிவு செய்க.
1. கடலலை, காற்று, ஓடும் நீர்
2. ஓடும்நீர். காற்று, கிளேசியர்
3. கடலரிப்பு, தரைக்கீழ் நீர், கிளேசியர்
4. ஓடும் நீர், தரைக்கீழ்நீர், கிளேசியர்
5. தரைக்கீழ் நீர், கிளேசியர், காற்று (.........)

13. புவித்தெறிப்பு" எனும் வளிக்கோளத்தில் இடம்பெறும் செயற்பாட்டை விளக்கும் கூற்று பின்வருவனவற்றுள் எது?
1. உயரத்திற்கேற்ப வெப்பநிலை மாற்றமடைவது.
2. வளிக்கோளத்தில் உள்ள நீராவியை புவிமேற்படை உறிஞ்சிக்கொள்வதாகும்
3. சூரியனிலிருந்து பெறப்படும் சூரிய கதிர்கள் நெட்டலைகளாக வளிக்கோளத்திலிருந்து தெறிப்படைதலாகும்.
4. ஓசோன் வாயுவை படைமண்டலம் உறிஞ்சிக் கொண்டு வளிக்கோளத்திற்கு உதவுவதாகும்.
5. பனிபடுநிலையை விட அதிகமாக வெப்பநிலை குறைவதாகும். (.........)

14. இலங்கைப்படத்தில் A மற்றும் Bஇனால் குறித்து காட்டப்பட்டுள்ள காலநிலை வலயங்களுக்கு மழைவீழ்ச்சி கிடைக்கக்கூடிய காலங்களை காட்டும் விடையை தெரிவு செய்க.




1. மார்ச் மாதமும் ஏப்ரல் மாதமும்
2. ஏப்ரல் மாதமும், ஒக்டோபர் மாதமும்
3. ஒக்டோபர் மாதமும், நவம்பர் மாதமும்
4. மே மாதமும், செப்டெம்பர் மாதமும்
5. மே மாதமும், டிசம்பர் மாதமும் (.........)

15. 1. ஓடும்நீர் 2. காற்று 3. கிளேசியர் 4. கடலரிப்பு
மேற்கூடிய புறவிசை செற்பாடுகளால் உருவாகக் கூடிய நிலவுருவங்களை ஒழுங்குமுறையாக காட்டும் விடையை தெரிவு செய்க.
1. சேற்றுநிலம், ஓங்கல், மணல்மேடு, நீர்வீழ்ச்சி
2. மணல்மேடு, ஓங்கல், லொயேஸ், நீர்வீழ்ச்சி
3. நீர்வீழ்ச்சி, லொயேஸ், ஓங்கல், மணல் மேடு
4. சேற்று நிலம், நீர்வீழ்ச்சி, ஓங்கல், கல்மற்றும் மணல்
5. கல் மற்றும் மணல், தூசு, சேறு, சேற்றுநிலம் (.........)

16. இலங்கையில் தரைக்கீழ் நீர் அதிகமாக காணப்படும் பிரதேசமாவது பின்வருவனவற்றுள் எது?
1. மத்திய மலைநாட்டில் 2. கரையோரச் சமவெளியில்
3. மயோசின் சுண்ணக்கல் படை பிரதேசத்தில் 4. தாழ்நில ஈரவலயத்தில்
5. வடமேற்குப் பிரதேசத்தில் (.........)

17. இலங்கையின் பிரதான 103 நதிகளில் நீளத்தில் இரண்டாவது இடத்தைப்பெறும் நதி எது?
1. வளவ கங்கை 2. களுகங்கை 3. களனிகங்கை
4. மல்வத்து ஓயா 5. கல்லோயா (.........)

18. பச்சைவீட்டு வாயுக்களை தோற்றுவிப்பதில் அதிக செல்வாக்கு செலுத்தும் மானிட நடவடிக்கை யாது?
1. எரிபொருள் பாவனை 2. அதிவேகப் பாதை நிர்மானம் 3. காடழிப்பு
4. சூரிய புள்ளி 5. விவசாய நடவடிக்கை (.........)

19. உலகின் உயிர்பெருந்திணிவுடன் தொடர்புடைய A மற்றும் B காட்டப்படும் கூற்றுக்கள் சரியாக பொருத்தினால் வரும் விடை பின்வருவனவற்றுள் எது?

| A | B |
|---|---|
| 1. இடைவெப்ப வலயக்காடுகள் | A. இரவு, பகல் இரண்டிலும் வரண்டகாற்று வீசும் |
| 2. மத்திய தரைக்காடுகள் | B. ஆவியீர்ப்பு குறைவாக காணப்படும் |
| 3. பாலைவனத் தாவரங்கள் | C. 750mm – 1500mm வரையான மழைவீழ்ச்சி |
| 4. புல்நிலங்களும் சவன்னாவும் | D. வெப்பமானவரண்ட காலநிலை காணப்படும். |

i. A, B, C, D ii. D, C, A,B iii. A, D, C, B
iv. C, D, A, B v. C, A, D, B (.........)

20. கரையோரங்களில் நிகழும் முன்கழுவல், மீள்கழுவல் செயற்பாடு காரணமாக கரையோரத்தில் ஏற்படும் தாக்கம் பின்வருவனவற்றுள் எது?
   1. கரையோரம் மேலெழுதல்
   2. கரையோர நிலம் குறைவடைதல்
   3. அரிப்புக் கருவிகள் உருவாதல்
   4. கரையோரத்திற்கு சமாந்தரமாக கடற்படுக்கை உருவாதல்.
   5. அதிக ஆழமுள்ள பகுதிகளிலுள்ள நீர் நீண்டகாலம் தேங்கி நின்று சேற்றுநிலங்களை உருவாக்குதல். (.........)

21. உயர் அகலக்கோட்டு சமுத்திரங்களில் இருந்து மத்தியகோட்டு சமுத்திரங்களை நோக்கி பயணிக்கும் நீரோட்டம் எவ்வாறு அழைக்கப்படும்?
   1.. வெப்பநீரோட்டம் 2. லெப்ரடோர் நீரோட்டம் 3. எல்நினோ நீரோட்டம்
   4. குளிர் நீரோட்டம் 5. லாநீனோ நீரோட்டம் (.........)

22. மானிட நடவடிக்கைகளால் இடம்பெறக்கூடிய காபன் வெளியேற்றத்தை குறைத்துக் கொள்வதற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை காட்டும் விடையாவது,
   1. மாற்றுச் சக்தி மீது கவனம் செலுத்தாதிருத்தல்.
   2. மீள் காடாக்க நடவடிக்கை
   3. திண்ம கழிவு முகாமைத்துவம்
   4. கால்நடை வளர்ப்பு
   2. விருத்தியடைந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல். (.........)

23. உலகில் நீர் மாசடைதல் பிரதான பிரச்சினையாகும். நீர் மூலங்கள் மாசுபாட்டிற்கு பங்களிப்புச் செய்யும் இயற்கை காரணியைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
   1. நுண்ணுயிர்கள் சேர்தல் 2. அசுத்தமான வாயு கலத்தல் 3. சுரங்கம் அகழ்தல்
   4. இரசாயன பசளை பாவனை 5. வெள்ளப்பெருக்கு (.........)

24. தாவர அடர்த்தி குறைவு
   தாவர இலைகள் உதிருதல்
   உயரமான மரங்களும் பாசிகளும் காணப்படல்
   மேற்கூறிய பண்புகளைக் கொண்ட உலகில் காணப்படும் உயிர்பெருந்திணிவு யாது?
   1. மத்தியதரைக் காடு 2. அயனவலயக் காடு 3. பாலைவனக்காடுகள்
   4. தைக்காகாடு 5. இடைவெப்ப வலயக் காடு (.........)

25. இலங்கையின் தாழ்நில ஈரவலய காலநிலை காணப்படும் வலயத்தின் பிரதான பண்புகளை காட்டும் விடை
   1. வருடாந்த வெப்பநிலை $27^0C$ விட அதிகமாகவும், மழை வீழ்ச்சி 2500mm உம் ஆகும்.
   2. வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 2000mm வெப்பநிலை $27^0C$ ஆகும்.
   3. வருடம் முழுவதும் சூரிய ஒளி கிடைப்பதோடு என்றும் பசுமையான காடுகள்.
   4. வருடாந்த வெப்பநிலை $20^0C$ ஐ விட அதிகம் வடக்கில் பருவக்காற்றும் மழை கிடைக்கும்
   5. சூறாவளி மூலம் அதிக மழையும் வருடாந்த வெப்பநிலை $32^0C$ ஐ விட அதிகம். (.........)

26. சனத்தொகையை கிராமிய நகர விவசாயம், கைத்தொழில் அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டுவது எவ்வாறு அழைக்கப்படும்.
   1. சனத்தொகையின் கூட்டு எனப்படும் 2. நகர சனத்தொகை எனப்படும்
   3. சனத்தொகை பரவல் எனப்படும் 4. சனத்தொகை அடர்த்தி எனப்படும்
   5. சனத்தொகை வளர்ச்சி எனப்படும் (.........)

27. இலங்கையின் சனத்தொகை பரம்பலானது இயற்கை இடரினாலும், யுத்தத்தினாலும் எதிரிநோக்கும் பிரச்சினை பின்வருவனவற்றுள் எது?
   1. வறுமை 2. அங்கவீனம் 3. ஆண் பெண், சமூகநிலை
   4. அகதிகலாதல் 5. சனத்தொகையின் சமனான பரவல் (.........)

28. உலக நகரமயமாக்கம் எல்லைகளைத் தாண்டி அதற்கு வெளியிலும் பரவலடைந்துள்ளது. என்பதனைக் காட்டக்கூடிய நகராக்க வலயம் பின்வருவனவற்றுள் எது?
   1. விப்டீஸ் நகரவலயம் 2. ப்ளூ பனானா நகரவலயம் 3. போப்வோச் நகரவலயம்
   4. லண்டன் நகரவலயம் 5. ஹொக்கைடோ நகரவலயம் (.........)

29. உலகின் முன்னேற்றகரமான விவசாய தொழில்நுட்ப முறையில் பசுமைப்புரட்சியில் கலப்பாக்கம் மூலம் விருத்திசெய்யப்பட்ட நெல்லினத்தை காட்டும் விடை எது?
1. TN -1 நெல்இனம் 2. BG 407 நெல்இனம் 3. IR 2061நெல்இனம்
4. தங்க அரிசி நெல் இனம் 5. IR 64 நெல்இனம் (.........)

30. இலங்கையின் விற்பனை செயன்முறையில் விவசாய உற்பத்திகள் மட்டுமல்லாமல் ஏனைய உற்பத்திகளையும் ஒரே கூறையில் விற்பனை செய்யும் அரசதுறை சார்ந்த விற்பனை நிலையம் பின்வருவனவற்றுள் எது?
1. வாரச்சந்தை
2. விஷேட பொருளாதார மத்திய நிலையம்
3. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதோச)
4. கூட்டுறவுக்கடை
5. பொருளாதார அதிவிஷேட விற்பனை நிலையம் (.........)

31. இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள விஷேட பொருளாதாரமத்தியநிலையம் பின்வருவனவற்றுள் எது?
1. மிகொட பொருளாதார மத்திய நிலையம்
2. கெப்படிபொல பொருளாதார மத்திய நிலையம்
3. கண்ணொருவ பொருளாதார மத்திய நிலையம்
4. கம்பளை பொருளாதார மத்திய நிலையம்
5. கடுகம்பொல பொருளாதார மத்திய நிலையம் (.........)

32. சக்திமூலமான பெற்றோலியத்தை பயன்படுத்துவதனால் கிடைக்கும் நன்மை ஒன்று பின்வருவனவற்றுள் எது?
1.. திரவமாதலால் கொண்டு செல்லல் இலகுவானது
2. சூழல் நேயமுடையது
3. நிரந்தரமான குழிகள் காணப்படுவது
4. வளிமண்டலத்துக்கு பாதகமற்றது.
5. அதிகம் வினியோகிக்க முடியும். (.........)

33. இலங்கையின் கனியமணல் உற்பத்தி மூலம் பெறப்படும் பிரதானமான உலோகமான டைடேனியம் உலோகத்தின் மூலம் ஆகாயவிமான உற்பத்தி தவிர பின்வரும் வேறு எந்த உற்பத்திக்கு பயன்படுகிறது?
1. கண்ணாடி உற்பத்தி
2. உர உற்பத்தி
3. தொலைக்காட்சி துறை
4. மருந்துவகை உற்பத்தி
5. மசகு எண்ணெய் உற்பத்தி (.........)

34. தற்கால கைத்தொழில்களில் சக்தி மூலங்களை பயன்படுத்தும் போது அதிக உற்பத்தி செலவுடன் மேலும் கவனம் செலுத்த வேண்டிய இன்னொரு காரணி பின்வருவனவற்றுள் எது?
1.. சக்தி மூலத்தின் தரம் தொடர்பாக.
2. சக்தி மூலத்தின் தேய்வு தொடர்பாக
3. சக்தி மூலத்தினை பயன்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினை தொடர்பாக
4. சக்தி மூலத்தினை பயன்படுத்தும் போது ஏற்படும் சுற்றாடல் தாக்கங்களை குறைத்துக் கொள்வது தொடர்பாக
5. சக்தி மூலத்தின் மாற்றம் தொடர்பில் (.........)

35. கனிய அகழ்வின் போது பெறப்படும் இரும்புத்தாதில் தரம் கூடிய மற்றும் குறைந்த கனியவகை இரண்டிணையும் காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?
1. சிதரைட், லிமோனைட் 2. மெங்கனைட், ஹெமடைட்
3. ஹெமடைட், மெங்கனைட் 4. லிமோனைட், ஹெமடைட்
5. சிதரைட், ஹெமடைட் (.........)

36. விவசாய உற்பத்தியின் வளர்ச்சியினை அதிகரிக்க எடுக்கக் கூடிய நடவடிக்கையைக் காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?
1. சேதன விவசாய முறை
2. மட்டுப்படுத்தப்பட்ட விவசாய முறை
3. இரசாயன பசளை பாவனையைக் குறைத்தல்
4. நுட்பமுறைகளை பின்பற்றல்
5. ஓரினப்பயிர்களை பயிரிடல் (.........)

37. இலங்கையின் நகராக்க மட்ட அடிப்படையில் அதிக நகர குடியிருப்புக்களை கொண்ட மாவட்டங்கள் முறையே,
1. கொழும்பு, கம்பஹா, களுத்துரை, குருனாகல்
2. கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம், காலி
3. கொழும்பு, கம்பஹா, கண்டி, அம்பாறை
4. கொழும்பு, களுத்துரை, மட்டக்களப்பு, கண்டி
5. கொழும்பு, களுத்துரை, கேகாலை, அம்பாறை (.........)
6.

38. இலங்கையின் உள்ளக இடப்பெயர்வுக்கான காரணங்களுள் அரசியல் காரணங்களுடன் தொடர்புடைய காரணி.
1. அனாதரவாதல் 2. கல்வி 3. திருமணம் 4. தஞ்சமடைதல் 5. மீள்குடியேற்றம் (.........)

39. இலங்கையில் மருந்து வகையின் உற்பத்தி, வர்ணப்பூச்சு, கண்ணாடி உற்பத்தி போன்றவற்றிற்கு மூலப்பொருளாக பயன்படுத்தப்படும் கனியங்களை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.
1. காரீயம், நிலக்கரி, கணியமணல்
2. பொசுபேற், நிலக்கரி, இரும்புத்தாது
3. பொசுபேற், கணியமணல், இரும்புத்தாது
4. பொசுபேற், காரீயம், கணியமணல்
5. காரீயம், கணியமணல், நிலக்கரி (.........)

40. 2014 இல் உலக சுகாதார அமையம் எடுத்துக்காட்டிய மிகவும் அபாயகரமான மட்டத்தினை 35 தடவைகள் அண்மித்துள்ள மாசடைவு எது?
1. ஜப்பானின் ஒசோகா வளி மாசடைவு
2. சீனாவில் பீஜிங் மற்றும் டியஜி நகர வளி மாசடைவு
3. இந்தியாவில் பொம்பாய், புதுடில்லி வளி மாசடைவு
4. தென் கொரியாவின் சோல் நகரத்தை அண்டிய வளி மாசடைவு
5. சிங்கப்பூரில் வளி மாசடைவு (.........)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

22 | T | I

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018
First Term Test - Grade 13 - 2018

சுட்டெண் : ......................

புவியியல் I
Geography I

காலம் : 2 மணி

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி II பகுதி III இலிருந்து ஒவ்வொரு வினாவை தெரிவுசெய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடைதருக.**

## பகுதி I

01). அ) தரப்பட்டுள்ள மகியங்கன இடவிளக்கப்படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள விளாக்களுக்கு விடை தருக.

i. படப்பிரதேசத்தில் இலக்கம் 01 தொடக்கம் இலக்கம் 06 வரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள இலட்சணங்களை பெயரிடுக. (பு. 3)

ii. படப்பிரதேசத்தில் வடக்குத் தெற்காக காணப்படும் நிர்வாக எல்லையை பெயரிட்டு அதில் பரந்துள்ள பௌதிக அம்சத்தையும் குறிப்பிடுக. ( பு . 1)

iii. $A_{26}$ பாதையின் நீளத்தை கிலோமீற்றரில் தருக. ( பு . 1)

iv. சொரபொரவெவவை அமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய பௌதீகக் காரணிகள் இரண்டை குறிப்பிடுக. ( பு . 2)

v. A – B இற்கான குறுக்கு வெட்டு முகத்தை அமைக்குக. ( பு . 3)

vi. படப்பிரதேசத்தின் தரைத்தோற்ற இயல்புகள் தொடர்பான இலட்சணங்கள் இரண்டையும் நீர்வடிகாலமைப்பு பாங்கு தொடர்பான இலட்சணங்கள் இரண்டையும் குறிப்பிடுக. ( பு . 4)

vii. படப்பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டுக்கும், தரைதத்தோற்ற இயல்புக்குமிடையிலான தொடர்பை 3 காரணங்களை காட்டி விளக்குக. ( பு . 6)

ஆ) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் பின்வரும் இடங்களை குறித்துக் காட்டுக.


| | | |
|---|---|---|
| i. மலாக்கா தொடுகடல் | ii. சென்பிரான்சிஸ்கோ நகரம் | iii. அட்டகாமா பாலைவனம் |
| iv. மஞ்சள் கடல் | v. ஜேர்மனி | vi. சாட்ஏரி |
| vii. யூரல் மலைத்தொடர் | viii. டவுன்ஸ் புல்நிலம் | ix. கியூபா |
| x. அமூர்நதி | | |

( பு . 10)

# பகுதி II

02). i. நவீன படவரைகலை முறையான புவியியல் தகவல் முறைமை (GIS) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை (GPS) ஆகிய இரண்டுக்குமிடையிலான வேறுபாட்டை விளக்குக (பு. 4)

ii. புவியியல் தகவல் முறைமையில் பல்வேறு வகையான தரவு மூலாதாரங்களை கொண்டு தரவுகளை சேகரித்து படமொன்றை அமைப்பது வரையான கட்டங்கள் சில இங்கு தரபட்டுள்ளன. இச்செயற்பாட்டை சுருக்கமாக விபரிக்குக. ( பு . 5)





iii. சூழல் கல்வி மற்றும் இயற்கைவளங்களை முகாமைத்துவப்படுத்தல் தொடர்பில் புவியியல் தகவல் முறைமையை பயன்படுத்தக் கூடிய முறைகளை உதாரணம் தந்து ஆராய்க ( பு . 6)

03). i. படங்களின் உருவாக்கம் மற்றும் பூகோள விஞ்ஞான தகவல்களைப் பெறுவதற்காக தற்காலத்தில் பயன்படுத்தப்படும் நவீன படவரைகலை விஞ்ஞானத்தின் பொது இயல்புகள் மூன்றினை குறிப்பிடுக. ( பு . 3)

ii. படநிர்மானத்தில் புவியியல் தகவல் முறைமையினை (GIS) பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள் 3 இனை குறிப்பிடுக. ( பு . 3)


iii. பூகோள இடநிர்ணய முறையில் பயன்படுத்தப்படும் மூலங்கள் சில கீழே A, B, C இனால் காட்டபப்பட்டுள்ளன.



**A** **B** **C**


இம்மூலகங்களை பெயரிட்டு இவை படவரைகலை விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படும் பாங்கை சுருக்கமாக விளக்குக. ( பு . 3)

iv.. புவியியல் தகவல் ஒழுங்கு முறையில் தரவுகளை களஞ்சியப்படுத்தும் முறையின் கீழ் பயன்படுத்தப்படும் குறியீடுகள் மூன்று கீழே காட்டப்பட்டுள்ளது. இம்மூன்று முறைகளையும் பெயரிட்டு தரவுகளை களஞ்சியப்படுத்தவும் ஒழுங்கமைக்கவும் பயன்படும் முறையை விபரிக்குக. ( பு . 6)



# பகுதி III

04). i. பின்வரும் அட்டவணையின் இடைவெளிக்குப் பொருத்தமான விடையை ஆங்கில எழுத்தால் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து எழுதுக. ( பு . 4)




A. பாவணையாளரின் நோக்கத்திற்கேற்ப சேகரிக்கப்படும்
B. ஒவ்வொரு தரவுக்கும் பெறுமதி இருக்கும்.
C. அதிக நம்பிக்கையுடைய தரவுவகையாகும்.
D. தொடராக பரந்திருக்காத தரவு ( பு . 4)

i. முதலாம் நிலைத் தரவை சேகரிக்கும் முறைகள் மூன்றை சுருக்கமாக விபரிக்குக. ( பு . 2)

ii. (a) கீழே தரப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தப்படாத தரவுகளை பயன்படுத்தி மீடிறன் பரம்பல் அட்டவணையொன்றை அமைக்குக. (வகுப்பு இடைவெளி 0-20, 21 -40 எனக்கொள்க) ( பு . 4)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 04 | 20 | 09 | 12 | 22 | 30 |
| 31 | 31 | 24 | 18 | 49 | 89 |
| 86 | 84 | 39 | 44 | 47 | 107 |
| 95 | 45 | 96 | 43 | 60 | 38 |
| 63 | 70 | 85 | 99 | 69 | 116 |
| 74 | 64 | 115 | 112 | 73 | 66 |
| 61 | 72 | 116 | 79 | | |

(b) நீர் தயாரித்த மீடிறன்பரம்பல் அட்டவணையை பயன்படுத்தி இழைவரையமொன்றையும், மீடிறன் பல்கோனியையும் அமைக்குக. ( பு . 5)

05). i. புவியியல் தகவல் விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படும் பிரதான தரவுவகைகள் இரண்டும் கீழே தரப்பட்டுள்ளது. புவியியல் விஞ்ஞானக் கற்கையின் போது இத்தரவுகளின் பாவணை தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

- முதலாம் நிலைத்தரவு
- இரண்டாம் நிலைத்தரவு ( பு . 4)

ii. புவியியல் விஞ்ஞான கற்கையில் இவ்விரு தரவுகளினதும் பாவனையினால் ஏற்படும் நன்மை தீமைகளை விபரிக்குக. ( பு . 5)

iii. புள்ளிவிபரத் தரவுத் தொகுதியில் தரவுகளின் அளவீட்டை காட்ட பயன்படுத்தப்படும் பின்வரும் அளவீடுகளை குறிப்பிட்டு அதில் ஏதாவது ஒன்றை பற்றி விபரிக்குக.

அ) ஒரே எண் அதிக தடவைகள் இடம்பெறுவது.
ஆ) ஏறுவரிசையிலோ, இறங்குவரிசையிலோ ஒழுங்குபடுத்தப்பட்ட தரவுத் தொகுதியொன்றின் மத்திய பெறுமானம்
இ) தரப்பட்ட தரவுகளை கூட்டி பெறும் தொகையினை அதன் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் பெறப்படும் பெறுமானம் ( பு . 6)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

**Provincial Department of Education - NWP**

22 T II

முதலாந் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2018

**First Term Test - Grade 13 - 2018**

சுட்டெண் : ........................

புவியியல் II

Geography II

காலம் : 3 மணி

**அறிவுறுத்தல்கள்.**


- **இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.**
- **ஒரு பகுதியிலிருந்து குறைந்தது 2 வினாக்களையேனும் தெரிவு செய்து மொத்தம் 5 வினாக்களுக்கு விடை எழுது**

## பகுதி - I


## <u>பௌதீக புவியியல்</u>

01). புவியின் வளிக்கோளத்தின் பிரதான படைகளை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. இதன் படி

1. வெப்பநிலை அதிகமான மற்றும், குறைவான படைகளையும் மற்றும் வெப்பநிலை ஒரே சீராக காணப்படும் வலயங்கள் இரண்டையும் பெயரிடுக. (பு 04)
2. மேலே படத்திற்கு அமைய வெப்பநிலையின் பரம்பலில் காணப்படும் வேறுபாடுகளை விபரிக்குக. (பு 06)
3. காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும். பௌதீக மானிடக் காரணிகள் மூன்றை விபரிக்குக. (பு 06)
4. காலநிலை மாற்றத்தின் பாதகங்களை குறைத்துக் கொள்வதற்காக மனிதனால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் இரண்டினை உதாரணம் தந்து விளக்குக. (பு 04)



02).




i. இப்படத்தில் A B C D எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள உலகின் சுண்ணக்கல் (காஸ்ட்) நிலத்தோற்றங்கள் காணக்கூடிய நான்கு பிரதேசங்களையும் பெயரிடுக.. (பு.04)

ii. சுண்ணக்கல் உருவாக்கப்படும் முறைகள் இரண்டை உதாரணம் தந்து விளக்குக. (பு 04)

iii. காஸ்ட் பிரதேச நிலவுருவங்கள் இரண்டை புனையா வரைபடத்தை பயன்படுத்தி விளக்குக. (பு 08)

iv. சமுத்திரத்திலுள்ள முறுகைக்கற் பாறைகளின் சூழல் பெறுமதிகள் இரண்டினை விபரிக்குக. (பு . 4)

03). i. புவியின் நீரியல்வட்ட செயற்பாட்டின் பிரதான கட்டங்கள் மூன்றை குறிப்பிடுக. (பு. 3)


ii. உலக நிர்வளம் அழிந்து போவதற்கான காரணங்கள் மூன்றை சுருக்கமாக விபரிக்குக. (பு. 6)

iii. நீர்வளத்தை பாதுகாக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மூன்றினை விபரிக்குக. (பு. 6)

iv. இலங்கையில் நீரிவளத்தை பாவிக்கக்கூடிய துறைகள் மூன்றினையும் குறிப்பிட்டு அத்துறைகளில் நீர்மாசடையக் கூடிய முறைகளை சுருக்கமாக விபரிக்குக. (பு. 5)

04). i. உயிர்பெருந்திணிவு என்பதனை விளக்குக. (பு. 4)

ii. கீழே காணப்படுவது வெப்பநிலைக்கேற்ப உயிரிபெருந்திணிவு பரவியுள்ள முறையை காட்டும் படமாகும்.




இப்படத்தில் A, B, C, Dஇனால் காட்டப்பட்டுள்ள உயிர்பெருந்திணிவுகளை பெயரிடுக. (பு. 4)

iii. உலகின் A வர்க்கத்திற்குரிய உயிரிபெருந்திணிவில் காணக்கூடிய இலட்சணங்களை பின்வரும் தலைப்புக்களின் கீழ் விபரிக்குக.

1. காலநிலை 2. தாவரங்கள் 3. பிரதான விலங்குகள் (பு. 6)

iv. உலகின் புன்னிலங்களும் சவன்னாவும் உயிர்ப்பெருந்திணிவில் இடம்பெறக்கூடிய மானிட நடவடிக்கைகள் மூன்றினை சுருக்கமாக விளக்குக (பு. 6)

## பகுதி -II

## <u>மானிடப் புவியியல்</u>

05). இலங்கையில் 2004 – 2012 வரையான சர்வதேச இடப்பெயர்வு தொடர்பான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வருடம் | குடிவரவு | குடியகழ்வு | தேறிய இடம்பெயர்வு |
|---|---|---|---|
| 2004 | 1463 | 1487 | -1.2 |
| 2005 | 1391 | 1421 | -1.5 |
| 2006 | 1440 | 1470 | -1.5 |
| 2007 | 1530 | 1565 | -1.8 |
| 2008 | 1644 | 1688 | -2.1 |
| 2009 | 1645 | 1673 | -1.7 |
| 2010 | 2106 | 2129 | -1.1 |
| 2011 | 2433 | 2479 | -2.2 |
| 2012 | 2496 | 2548 | -2.6 |

**மூலம் : குடிசன தொகைமதிப்பு திணைக்களம்**

i. இவ்வட்டவணைப்படி இலங்கையின் தேறிய இடப்பெயர்வு தொடர்பாக காணக்கூடிய பண்புகள் மூன்றை குறிப்பிடுக. (பு.3)

ii. இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்வதற்கான காரணங்கள் இரண்டை விளக்குக. (பு. 5)

iii. இலங்கையில் உள்ளக இடப்பெயர்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றினை உதாரணம் தந்து விளக்குக. (பு. 6)

iv. இலங்கையின் உள்ளக இடப்பெயர்வானது மேல் மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டங்களிலேயே அதிகம் இடம்பெறுகின்றது. இதனால் எதிர்நோக்கக் கூடிய பிரச்சினைகள் மூன்றினை உதாரணம் தந்து விளக்குக. (பு. 6)

06). i. விவசாய உற்பத்திகளை விரிவாக்க எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் இரண்டினை குறிப்பிடுக (பு. 4)

ii. விவசாய உற்பத்திகளை உரியதரத்துடன் பெற்றுக் கொள்ள எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மூன்றை விபரிக்குக. (பு. 6)

iii. இலங்கையில் விவசாய உற்பத்திகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் விஷேட பொருளாதார மத்திய நிலையங்களால் ஆற்றப்படும் சேவைகள் மூன்றை சுருக்கமாக விபரிக்குக. (பு. 6)

iv. இலங்கையின் விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள் மூன்றை உதாரணம் தந்து விளக்குக. (பு. 6)

07). அகழ்வுக்கைத்தொழிலுடன் தொடர்புடைய பின்வரும் கனியங்களை

i. அதிகமாக ஏற்றுமதி செய்யக்கூடிய நாடுகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக. (பு 03)

1. பெற்றோலியம் 2. நிலக்கரி 3. இரும்புத்தாது

(அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா) (பு. 3)


ii. உலகின் அகழ்வுக் கைத்தொழிலின் போக்குகள் மூன்றை சுருக்கமாக விபரிக்குக. (பு. 5)

iii. உலகின் அகழ்வுக் கைத்தொழில் தோண்டியெடுக்கும் தன்மைகள் இரண்டையும் உதாரணத்துடன் விளக்குக (பு. 6)

இலங்கையில் கனிய வளப்பயன்பாட்டினால் பின்வரும் துறைகளில் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உதாரணம் தந்து விளக்குக.

1. நீரிவடிப்பில் ஏற்படும் பாதிப்பு
2. தரைத்தோற்றத்தில் ஏற்படும் பாதிப்பு
3. வளிமாசடைதல் (பு. 6)

08). உலக சனத்தொகை அளவுவிற்கேற்ப 10 மில்லியனை அண்மித்த அளவிலான சனத்தொகை கொண்ட நகரங்கள் சில கீழே உலகப்படத்தில் ABCDE எழுத்துக்கலால் தரப்பட்டுள்ளது.
(பு. 4)




i. உலகப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் தற்போது சனச்செறிவு கொண்ட வலயங்கள் நான்கினுள் அடங்கக்கூடிய நகரங்கள் ஒவ்வொன்றை குறிப்பிடுக. (பு. 4)

ii. உலக நகராக்க வீதப்படி 2014 ஆம் ஆண்டு ஆசியவலயம் முன்னனியில் உள்ளது. அதற்கான காரணங்களை ஆராய்க. (பு. 4)

iii. இலங்கையின் கிராம நகரக்குடியிருப்புக்களை ஏனைய குடியிருப்புக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய பண்புகள் மூன்றினை சுருக்கமாக விபரிக்குக. (பு. 6)

iv. இலங்கையின் நகராக்கத்தின் நவீன போக்குகள் மூன்றினை சுருக்கமாக விபரிக்குக. (பு. 6)


## முதலாம் தவணைப் பரீட்சை - 2018
## புவியியல் I Geography I - தரம் - 13 - விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | ii | 11) | iv | 21) | v | 31) | ii |
| 2) | ii | 12) | ii | 22) | i | 32) | i |
| 3) | iv | 13) | iii | 23) | v | 33) | iii |
| 4) | iii | 14) | v | 24) | v | 34) | iv |
| 5) | iv | 15) | iii | 25) | iii | 35) | iv |
| 6) | v | 16) | iii | 26) | iii | 36) | iv |
| 7) | iii | 17) | iv | 27) | iv | 37) | iii |
| 8) | ii | 18) | i | 28) | ii | 38) | v |
| 9) | iii | 19) | ii | 29) | i | 39) | iv |
| 10) | iii | 20) | iv | 30) | iii | 40) | ii |

சரியான விடைகளுக்கு 2 புள்ளி வீதம் 60 புள்ளிகள்

### பகுதி I

01. (1) தேசிய ஆள்கூற்று புள்ளி 2) மாகாண எல்லை 3) அணைக்கட்டு 4) பாறை
5) ஒற்றையடிப்பாதை (புள்ளி 3)
(ii) மாகாண எல்லை (மகாவலி கங்கை) நதி (புள்ளி 1)
(iii) 11km (புள்ளி 1)
iv) சிறு கனவாய் ஒன்று காணப்படுகின்றமை
▸ இரு மலைகளை இணைத்து குஒக்கட்டை அமைத்து முடியுமாதல் ▸ நதி (புள்ளி 2)
(v)




(vi) தரைத்தோற்ற இயல்பு : தனிக்குன்று மத்திய விசாலமான பள்ளத்தாக்கு குத்துச்சாய்வுடனான பிரதேசம். சிறுகணவாய் காணப்படுதல் போன்றன.

நீர்வடிகால் பாங்கு : மியாருதற்வளைவு, சிறுபள்ளத்தாக்கு – மரநிகர் வடிகால்பாங்கு போன்றன. (புன்னி 3)

(vii) சமவெளிப்பபிரதேசங்களில், நெற்பயிரிசெய்கை, சமவெளி மற்றும் கணவாயினூடாக பாதைகள் விரிவடைந்துள்ளமை. மலைகளுக்கிடையே அமைந்துள்ளமை. சமவெளிப் பிரதேசங்களில் கொத்துக் குடியிருப்பு


ஆ) பொருத்தமான இடத்தில் குறித்துக்காட்டல் (புள்ளி 10)

02. (1) CABD (புள்ளி 4)
(ii) வினாக்கொத்து, நேர்முகக்கலந்துரையாடல், அவதானம், மதிபபிடல், சுயகணிப்பீடு.
(iii)

| வகுப்பாயிடை | மிடில் மீடிறன் |
|---|---|
| 0 - 20 | 05 |
| 21-40 | 07 |
| 41-60 | 06 |
| 61-80 | 10 |
| 81-100 | 07 |
| 101-120 | 05 |
| | 40 |

(புள்ளி 5)

iv.




(புள்ளி 5)

03. i) முதலாம் நிலைத்தரவுகள் : யாதேனும் ஒரு நோக்கத்திற்காக புதிதாக திரட்டப்படும் தரவாகும். : முதன்மைத்தரவுகளை சுயமாக கணக்கியல் அல்லது தனிப்பட்ட உரையாடல்கள். தொலைபேசி உரையாடல்கள் மூலம் பெறலாம்.
இரண்டாம் நிலைத்தரவு : புதிதாக தரவுகளை சேகரிக்காது வேறு மூலகங்களிலிருந்து பெற்ற தரவுகளை பயன்படுத்தினால் அது இரண்டாம் நிலைத் தரவு எனப்படும். (புள்ளி 4)

ii) நன்மை, தீமைகளை விபரித்தல் (புள்ளி 3)

iii) அ) ஆகாரம் ஆ) இடையம் இ) இடை (புள்ளி 3)

04.

| GIS | GPS |
|---|---|
| கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் பயன்படுத்தி நிலததின் இடரீதியாக தொடர்புபடும் தகவல்களை திறன்மிக்கதாக பெறுதல். தேக்கிவைத்தல் தேவைக்கேற்ப காட்சிப்படுத்தல, இற்றைப்படுத்தல், கையாளுதல், பகுப்பாய்வு செய்தல், என்பவற்றக்காக ஒழுங்கமைக்கப்பட்ட நுட்பம் ஆகும். தென் கூறுகள் வன்பொருள் மென்பொருள், தரவு பயன்கள், முறைகள்<br><br>(பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக) | புவிக்கு மேலே அனுப்பப்பட்ட செய்மதியினூடாக புவியின் எந்தவொரு பொருளினதும் அல்லது ஏதாவது உருவின் அமைவை மிகவும சரியாக அறிந்து கொள்ள உருபாக்கப்பட்ட இயந்திரத்தொகுதி ஆகும். இதன் அடிப்படைத் தொகுதி மூன்றாகும். விண்வெளிப்பரிவு, கட்டுபபாட்டுப்பரிவு, அவதானிப்பு நிலையம். |

05. (i) வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் தொடர்பால் உபகரணங்ளூடாக உருவாக்கப்படும் பல்வேறு தகவல்கள் உள்ளடக்கப்படல்.

- மிகச்சரியான அமைவிடத்தை காட்ட முடியுமாதல்
- உண்மையான நீளம், அகலம், உயரம் ஆகிய பரிமாணங்களை இனங்காண முடிதல்.
- இலகுவாக இற்றைப்படுத்த முடியுமாக இருத்தல்.
- களஞ்சியப்படுத்தல், பயன்படுத்தல், எடுத்துச்செல்லல் ஆகிய இயலுமையுடையதாக காணப்படல்

(ii) வெவ்வேறு தகவல்கள் ஒவ்வொரு கருப்பொருளைக் கொண்டு படத்தட்டுகளாக களஞ்சியப்படுத்தல் மீண்டும் அவற்றை பரிசீலனை செய்ய முடியுமாதல்.

- முப்பரிமாணப் படங்களை பெறமுடிதல்
- இடம்சார் தரவு மட்டுமன்றி இடம் சாராத தரவுக்களையும் விளக்கலாம்.
- குறுகிய காலத்தில் இற்றைப்படுத்த முடியுமாதலால் நவீன தகவல்களைப் பயன்படுத்த முடியுமாதல்

(பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்குக)

(iii) விண்வெளிப் பிரிவு : விண்வெளியில் நிறுத்தப்பட்டுள்ள இச்செய்மதிகள் தமக்குரிய அச்சில் பிரயானம் செய்து புவிமேற்பரப்பு தொடர்பான தகவல்களால் பெற்றுக்கொள்ளல்.

கட்டுப்பாட்டுப்பிரிவு : GIS ஊடாக வெளியிடப்படும் தரவுகளை பொதுமக்கள் பெறுகையாகும். இப்பெறுகை வாகனங்களின் பொறுத்துவதற்கும், கையில் கொண்டுசெல்லுமம் உபகரணமாகவும் பயன்படுத்தப்படும். இவற்றை உதாரணத்துடள் விளக்குதல். (புள்ளி 3x2=6)

(iv) புள்ளிக் கோடு முடிய பரப்பு முறையில் தரவுகள் களஞ்கியப்படுத்தப்படல். இது பொதுவாக பௌதீக பண்பாட்டு அம்சங்களின் உரிய வடிவிலான பிரதிபலிப்பதாக இருக்கும். தரவுகள் இங்கு சகேர இலக்கங்களில் (code) மாற்றப்பட்டு கணனிக்கு உள்ளீடு செய்யப்படுகின்றன. பேன்ற விடயங்களை விளக்குதல்.

A புள்ளி – கிணறு B. கோடு – நதி C. பல்கோணி – நீர்த்தேக்கம். (புள்ளி 6)

04. (ii) GIS மூலம் படமொன்றை அமைப்பதற்காக தரவுகளும், தகவல்களம பல்வெறு மூலகங்களிலிருருந்து பெறப்படும்.

- மெற்றிக் படம் அல்லது, கருப்பொருள் படம் அல்லது வேறு இழடவிளக்கப்படம் இதில் ஒரு மூலமாகும்.

- காடுகள், நதி மற்றும் நீர்வடிகாலமைப்பு, பயிரிநிலங்கள், நகரங்கள் அவை தொர்பான தகவல்கள் விமானப்படத்தின் மூலம் பெறப்படும்.
- விண்வெளியில் பிரயாணம் செய்யும் விஷேட செய்மதிகளுக்குமாக புவியின் அமைவிடம் மற்றும் அண்மை அயலவர் பற்றிய தகவல்களை அறிய முடிகிறது.
- அரச அல்லது தனியார் நிறுவனங்களினால் ஒன்று சேர்க்கப்படும் தரவுகள் தரவு அட்டவணையாக அல்லது அறிக்கையாக இதற்காக பயன்படுத்தப்படும்.

இந்த தரவு மூலாதாரங்கள், ஒன்றையோ அல்லது பலதையுமோ கணனியூடாக சரியாக முறையாக படமொன்றை அமைக்க அல்லது பகுப்பாய்வு செய்ய முடியுமாக இருத்தல் (புள்ளி 5)

(இவ்வாரான பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக)

(iii) சூழற்கல்வி : வளிமாசடைதல், நீர்மாசடைதல், நகரக்கழிவுகளை அகற்றல், கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தல், வனப்பாதுகாப்பு உயிர்பல்வகைமையை பாதுகாத்தல், கரையோர சுகாதாரமாக வெள்ளப்பெருக்கு கண்காணிப்பு போன்ற சூழல் கல்விக்கு பயன்படல்..

இயற்கை வளமுகாமைத்துவம் : காடுகள் தொடர்பான கல்வி, நீரேந்துப்பிரதேசம் தொடர்பான தகவல்களை திரட்டுதல், உயிரிபல்வகைமை, கடற்கரையோரவளம் போன்றன சந்பந்தமாக அறிய பயன்படல்.

(இவ்வாறான விடைகளுக்கு புள்ளி வழங்குக)

# பகுதி II

01). i. 1. வெப்பமண்டலம் இடைமண்டலம் மாறன்தரபிபுஎல்லை இடைத்ரிப்பு எல்லை

2. மாறன் மண்டலம் - கடல்மட்டத்திலிருந்து உயரச் செல்லச் செல்ல வெப்பநிலை வீழ்ச்சியடையும்.

படைமண்டலம் :- மேலே செல்லச்செல்ல வெப்பநிலை அதிகரித்துச் செல்லும். ஓசோன் படை காணப்படுவதால் வெப்பநிலை அதிகரிக்கம்.

இடைமண்டலம் :- உயரச் செல்லச்செல்ல வெப்பநிலை வேகமாக வீழ்ச்சியடையும்.

வெப்ப மண்டலம் : - அதிக வெப்பத்தை கொண்டது.

3. பௌதிக காரணி : - சூரியபுள்ளி, லாநினா, எல்நினோ, எரிமலை

மானிடக்காரணி :- காடழிப்பு, உயிர்கலட்டு எரிபொருள் தகனம் இரசாயன பசளையல்லா CFC வாயு வெளியேற்றல். போன்ற பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக்.

4. பச்சைவீட்டு வாயுக்களை குறைத்தல், உயிர்வாயுவின் பயன்பாட்டை அதிகரித்தல், திண்மக்கழிவுகளை முகாமை செய்தல், காடகத்தை விரிவுபடுத்தல்.

02) 1. A யுகொஸ்லாவியா B – யுகடான் தீகபற்பம் C - இலங்கையின் மயோரின் சுண்ணக்கல் படுக்கை

D – ரஸ்யாவின் அங்காரா மற்றும் யெனிசி பிரதேசம்

2. **பொறிமுறையாக** : - சமுத்திரம் நீரில் வாழும் பல்வேறு உயிரினங்களூடாக உருவாகும் சுண்ணக்கல்பாறை

**இரசாயன முறையில் உருவாகும் சுண்ணக்கல்** : - சமுத்திரத்திலுள்ள முருகைகற்பாறை, உயிரினங்கள், நத்தைகள், மீன்கள், போன்ற கடல்வாழ் உயிரினங்களின் வன்கூடுகள்

3. சரியான விடைக்கு புள்ளி வழங்குதல் 4. உயிர் பல்லகைமை பாதுகாக்கப்படல் கடலரிப்பு குறைவடைதல

03) ஆவியாக்கம், பனிபடுநிலை ஒழுங்குதல், மழைவீழ்ச்சி, கழிவ நீரோட்டம்

2. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

3. தரைக்கீழ் நீரின் பயன்பாட்டை அதிகரித்தல்.

- குளம் மாற்றும் பாரிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல்
- நீரேந்துப் பிரதேசத்தை பாதுகாத்தல்
- நீரின் தரத்தை பாதுகாத்தல், மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்

4. கைத்தொழில்துறை, நடவடிக்கைகள்

விவசாய நடவடிக்கைள் - அன்றாடப்பாவணை, இம்மூன்று துறைகளிலும் எவ்வாறு நீரை பாவிக்கலாம் என்பதை விபரித்தால் புள்ளி வழங்குக

04) 1. குறிப்பிட்ட வனவிலங்குகளையும் விஷேட தாவர வகைகளையும் கொண்ட இயற்கை தாவரங்களது கூட்டமாகும்.

2. A பாலைவனத்தாவரம்

B - இடைவெப்பவலய காடுகள்

C – தைக்காகாடுகள்

D – துந்திராக

3. காலநிலை:- உயர்வான வெப்பநிலை குறைந்த மழைவீழ்ச்சி ஆவியாக்கம் அதிகம்

தாவரங்கள் :- சதைப்பிடிப்பான தண்டுள்ள தாவரங்கள்

சிறிய அளவிலான இனங்கள் - தாவர இலைகள் மெழுகினால் மூடப்பட்டுள்ளன.

சாற்றுத் தன்மையுள்ள தாவரங்கள், முற்செடிகள் - நீண்ட வேர் கொண்ட தாவரங்கள்

விலங்குகள் :- ஒட்டகம், மான், ஓநாய், ஓணான்

4. கோதுமை பயிரிசெய்கை , விலங்கு வளர்ப்பு தொடர்பான விளக்குதல்.

05) மானிடப்புவியியல்

1. இடப்பெயர்வு பெறுமானம் மறைப்பெறுமானத்தில் உள்ளது.

- 2005 – 2006 ஆம் ஆண்டுகளில் தேறிய இடப்பெயர்வு – 1.5 ஆக காணப்பட்டது 2010 இல் - 2.6 ஆக அதிகரித்துள்ளது.

2. வேளைவாய்ப்புக்காக, கல்விக்காக
3. திருமணம், தொழில், கல்வி, மீள்குடியேற்றம், அனாதரவாதம்
4. தொழில் பிரச்சினை, இடப்பிரச்சினை, போக்குவரத்து நெறிசல், கலாச்சார சீர்கேடுகள்

06) 1. வினை நிலப்பரப்பை அதிகரித்தல் - குறுகிய காலத்தில் விளைச்சல் தரக்கூடிய பயிர்களை அறிமுகம் செய்தல்.

2. உற்பத்திகளின் வீண் விரயத்தை தவிர்த்தல்

- அதிவேக பயணமுறைகளை கையாளல்
- குளிரூட்டி வசதிகொண்ட வாகனங்களை பயன்படுத்தல்
- முறையாக களஞ்சியப்படுத்தலல்

3. விவசாய உற்பத்திகளுக்கு நியாயாமான விலையை பெற்றுக் கொடுத்தல்

- இடைத்த்ரகர்களுக்கு உற்பத்திகளை விற்பனை யெ்யாது நேரடியாக வியாபாரிக்கு விற்பனை செய்தல்
- நுகர்வோர் நியாயமாக விலையில் விவசாயப்பொருட்களை பெற்றுக் கொள்ளல்.

4. விவசாய நிலங்கள் கைநழுவிச் செல்லல் - உணவுப்பொருள் இறக்குமதி
- சீரற்ற காலநிலை - உற்பத்திச் செலவு அதிகரித்தல்
- சந்தைப்படுத்தல் பிரச்சினை

07) 1. பெற்றோலியம் :- ரஷ்யா - நிலக்கரி: - இந்தோனேசியா - இரும்புத்தாது :- அவுஸ்திரேலியா

2. i, புவிமேற்பரப்பில் :- மணல், களி ii, புவியினுள் :- இரும்புத்தாது, தங்கம், பெற்றோலியம்

3. புதிய கைத்தொழில் நாடுகளின் பிரவேசம் - குறைந்த தரத்திலான உலோக உற்பத்தி
- நவீன தொழில்நுட்ப பாவணை - போட்டி

4. நீர் வடிப்பில் ஏற்படும் பாதிப்பு :- மாணிக்கக்கல் அகழ்தல் காரணமாக நீர் விடயத்தில் பாதிப்பு ஏற்படல், குழிகள் தோற்றம் பெறல், நதி பெருக்கெடுத்தோடும் திசையும், அகலமும் மாறுபடும்.

தரைத்தோற்றம் :- கரையோர அமைப்பு மாற்றமடைதல், பாரிய குழிகள் உருவாதல், மண்ணரிப்பு தீவிரமடைதல், குழிகளில் நீர் நிரம்புவதால் சூழல் மாசடைதல்.

08) 1. i. தென் ஆசியா – B புதுடில்லி

கழக்காசியா C பீஜிங்

தென்கிழக்காசியா A ஜகார்தா


வடமேல் ஐரோப்பா E லண்டன்

2.......

3. நாளாந்த இடப்பெயர்வு அதிகம் - கிராம இயல்புகள் விஞ்சி, நகர இல்புகளும் தோற்றம் பெறு – கிராம நகர பண்புகள் அதிகம் அதன் வெளி எல்லை படிப்படியாக நகர பிரதேசங்களை நோக்கி தள்ளப்படும்.

4. கிரமகுடியிருப்பு குறைவடைந்து நகர மற்றும் கிராமிய
நகர குடியிருப்பு அதிகரிக்கின்றது.
விவசாய நிலச் சேவை வசதிகளுக்கா பயன்படுத்தப்படுகின்றன.
உலகமயமாலின் செல்வாக்குக்கு உட்படல்
வீடுகள் குத்தகை விருத்தியடைவதால் சனத்தொகை அதிகரித்துள்ளது.

v.




LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න